பாலக் கோம்பையில் புதிய கண்மாய்.

* 348 வினு.—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் கோம்பையில் ஓர் கண்மாய் அமைக்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு சிக்கனமற்றது என்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக மதுரை சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியரும் மற்றும் பல அதிகாரிகளும் வந்து பார்த்து, அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று என்னிடமே கூறிச் சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இத்திட்டம் சரியில்லை என்று கூறுகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினல் அங்கே உள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை இனிமேலாவது மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, $7\frac{1}{2}$ லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் சிக்கனம் அற்றது என்று கைவிடப்பட்டது. மறுபடியும் அந்த வட்டார மக்களிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால், அதையேற்று அரசாங்கம் தலைமைப் பொறியாளரை மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஆணையிட்டிருக்கிறது. மறுபரிசீலனையில் அது சிக்கனம் என்று அரசுக்கு அறிக்கை வருமானல், நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்கள்.

* 349 வினு.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி திட்டங்களை அமுல் படுத்த வருடாந்திர மானியமாக ரூ. 10 கோடி அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆம்.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தத் திட்டத்திற்கு இது வரை எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது எப்போது நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

TRUTH ALONE TRIUMPHS